Reg. No. : ........................................

**Code No. : 20443** **Sub. Code : AMTA 55**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2024

Fifth Semester

தமிழ் – முதன்மைப்பாடம்

தமிழக வரலாறும் பண்பாடும் – I

(For those who joined in July 2020 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி

சரியான விடையைத் தேர்வு செய்க.

1. கோலாரியர் பேசிய மொழி எது?

   (அ) தமிழ் (ஆ) ஹிந்தி

   (இ) சமஸ்கிருதம் (ஈ) முண்டா

2. ஹரப்பாவில் எத்தனை சிவலிங்கங்கள் கிடைத்துள்ளன?

   (அ) 600 (ஆ) 700

   (இ) 800 (ஈ) 900

3. தமிழகத்தில் எத்தனை இடங்களில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது?

   (அ) 30 (ஆ) 40

   (இ) 50 (ஈ) 60

4. தமிழ் மொழியை எழுதுவதற்காகப் பயன்பட்ட பண்டைய எழுத்துமுறை எது?
(அ) வட்டெழுத்து (ஆ) கிரந்தம்
(இ) பிராமி (ஈ) ஏதுமில்லை

5. கரிகாலனின் மகன் யார்?
(அ) இளஞ் சேட் சென்னி
(ஆ) உதயஞ் சேரலாதன்
(இ) முடத்திருமாறன்
(ஈ) பெருநற் கிள்ளி

6. பாண்டியர்கள் சூடிய மாலை எது?
(அ) அத்திப்பூ (ஆ) பனம்பூ
(இ) வேப்பம்பூ (ஈ) அரளிப்பூ

7. களப்பிரர்கள் ஆதரித்த மதங்கள் யாவை?
(அ) ஜைனம், பவுத்தம்
(ஆ) சைவம், வைணவம்
(இ) இஸ்லாம், கிறித்தவம்
(ஈ) பாலி

8. சங்கப் பாடலைப் பாடியப் புலவர்கள் எத்தனை?
(அ) 472 (ஆ) 473
(இ) 474 (ஈ) 475

9. பல்லவர் காலத்தில் இருந்த சமஸ்கிருதப் புலவர்கள் யார்?
(அ) தர்மபாலர் (ஆ) விடேல் விடுகு
(இ) தண்டி, பாரவி (ஈ) வரகுணன்

10. பல்லவர்களைப் பற்றி முதன் முதலில் எழுதியவர் யார்?
(அ) T.S. எலியட் (ஆ) வால்டர்ஸ்காட்
(இ) ஜாண்சன் (ஈ) சர். வால்டர் எலியட்



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.
(அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) இரும்பு காலம் குறித்து எழுதுக.
(அல்லது)
(ஆ) லிங்க வழிபாடு குறித்து எழுதுக.

12. (அ) தமிழகச் சிற்பங்களும் ஓவியங்களும் குறித்து எழுதுக.
(அல்லது)
(ஆ) பல்லவர் கால இலக்கிய வளர்ச்சி குறித்து எழுதுக.

13. (அ) நடுகல் வழிபாடு என்றால் என்ன? விளக்குக.
(அல்லது)
(ஆ) சிலப்பதிகாரத்தில் காணப்படும் பூதங்கள் பற்றிய செய்திகளை தொகுத்தெழுதுக.

14. (அ) களப்பிரர்கள் யார்? விளக்குக.
(அல்லது)
(ஆ) வாணவராயர் யார்? விளக்குக.

15. (அ) களப்பிரர் கால சமயங்கள் குறித்து எழுதுக.
(அல்லது)
(ஆ) முத்தரையர்கள் யார்? விளக்குக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்குக் 600 சொற்களில் விடை தருக.
(அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) தமிழக நில அமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது விளக்குக.

(அல்லது)

(ஆ) புதிய கற்காலம் குறித்துக் கட்டுரை வரைக.

17. (அ) பண்டைய தமிழக அரசினை கால வாரியாக வகைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தமிழகச் செப்பேடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

18. (அ) சங்ககால அரசியல் நிலை குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) குறுநில மன்னர்கள் குறித்துக் கட்டுரை வரைக.

19. (அ) சங்ககால இலக்கியங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) களப்பிரர்கால மத வழிபாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

20. (அ) முதலாம் நரசிம்ம பல்லவன் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) நரசிம்மன் அமைத்த கோயில்கள் குறித்துக் கட்டுரை வரைக.

---